### செங்கம் வட்டத்தைப் பிரித்து புதுப்பாளையம் அல்லது காஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கப்பட வேண்டும்!

# கலசப்பாக்கம் வட்டத்தை - திருவண்ணாமலை வருவாய் கோட்டத்திற்கு மாற்றிடுவீர்!

## சட்டப்பேரவையில் – பெ.சு.தி. சரவணன் பேச்சு

**சென்னை, ஏப். 14 -**

**சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய கலசப் பாக்கம் தொகுதி கழக உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் , 'செங்கம் வட்டத்தைப் பிரித்து - புதுப்பாளையம் அல்லது காஞ்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கிட வேண்டும்" என்றும் - "கலசப்பாக்கம் வட்டத்தை ஆரணி வருவாய் கோட்டத்தில் இருந்து பிரித்து திருவண்ணாமலை வருவாய் கோட்டத்திற்கு மாற்ற வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:–

'கூட்டுறவே நாட்டுயர்வு', 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற சான்றோருக்கு இலக்கணமாக கூட்டுறவுத் துறை என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு தளபதி அவர்களும் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்பொழுதெல்லாம் இந்த கூட்டுறவுத் துறை தமிழகத்தில் ஒரு சிறப்பு பெற்று விளங்கிக் கொண்டிருக்கிறது. தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் பொங்கல் தொகுப்பு, கூட்டுறவு சங்கம்மூலம், நியாய விலைக் கடைகள்மூலம் வழங்குவது கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு சிறப்பு. தமிழ்நாடு கூட்டுறவுத் துறை வரலாற்றில் முதல்முறையாக 20232024 ஆம் ஆண்டில் பயிர்க்கடன் ரூ.15 ஆயிரம் கோடியை தாண்டி வழங்கியது நம் தளபதியார் அவர்கள் ஆட்சியில்தான். தற்போது மொத்தம் 15,542.84 கோடி ரூபாய் வழங்கியுள்ளது என்பது தமிழக வரலாற்றில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளுக்கு ஒரு பொற்காலமாக கூட்டுறவுச் சங்கம் வழங்கிக் கொண்டிருக்கிறது. குடும்பத்திற்காக அயராது உழைக்கும் மகளிரை கௌரவிக்கும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ் உரிமைத் தொகை பெறுவதற்காக இதுவரை 8 இலட்சத்து 20 ஆயிரம் வங்கிக் கணக்குகள் மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொடங்கப்பட்டது, கூட்டுறவு சங்கத்திற்கு ஒரு சிறப்பாகும்.

### விவசாயிகளுக்கு உழவர் கடன்!

தமிழ்நாட்டில் வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா நடவடிக்கைகளுக்காக மக்களுக்கு கடன் வழங்க 4,454 தொடக்க வேளா ண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் 151 கிளைகளுடன் 12,505 கிராம ஊராட்சிகளில் செயல்பட்டு, அனைத்து கிராம மக்களுக்கும் கடன் வழங்குதல், கடன் வழங்கும் பணியுடன் பலவித சேவைகளை வழங்குவதுடன் கூட்டுறவு இயக்கத்தின் அடையாளமாக தொடக்க வேளா ண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் ஏழை, நடுத்தர விவசாய பெண்களுக்கான வங்கியாக கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருவது ஒரு சிறப்பே ஆகும். ஊழியர்களே கடந்த காலத்தில் ஆள் பற்றாக்குறை ஊழியர்கள் இல்லாத தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் காலியாக இருந்த நியாய விலை கடை ஊழியர்களின் பணியிடங்களை நிரப்பியதும் நம் திராவிட மாடல் ஆட்சியில்தான்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டைத் திட்டத்தி ன்கீழ் 7 percent வட்டி விகிதத்தில் குறுகிய கால பயிர் கடன்களை வழங்கி வருவது நம்முடைய கூட்டுறவு சங்கத்தின் சிறப்பம்சமாகும். தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் 5 இலட்சத்து 47 ஆயிரத்து 800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4,047 கிடங்குகள் உள்ளன. இவற்றை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் வகையில் விளைபொருட்களுக்கு நல்ல விலையைப் பெற்றுத்தரவும், குறு, சிறு விவசாயிகளுக்கு குறுகிய கால கடன் சேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக தானிய ஈட்டு கடன்களை வழங்கி விவசாயிக ளுக்கு பேருதவியாக கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்காக கடன் வழங்கி, சிறப்பாக செயல்படுவதற்காக தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி சிறந்த கடன் வழங்கும் நிறுவனம் என்ற ஒன்றிய அரசின் விருதினை 5 முறை பெற்றது சிறப்பம்சமாகும்.

மகளிர் சுயஉதவிக் குழு கடன் தள்ளுபடி, விவசாயக் கடன், நகைக் கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் உதவி, மகளிர் சுய உதவிக் குழுவிற்கு அதிகளவு கடன் வசதி இதனால் கிராமங்களில் பொருளாதாரம் வளர்ந்துள்ளது. முத்தமி ழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விவசாயிகள் வாங்கிய சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான். கூட்டுறவு சங்கம்மூலம் முதல்வர் மருந்தகம் ஆயிரம் தொடங்கப்பட்டு குறைந்த விலையில் மருந்துகள் வழங்கப்படுவது ஒரு சிறப்பாகும். கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு குடும்பத்திற்கு 40 கிராம், 5 பவுன் உள்ளிட்ட நகைக் கடன்களை பெற்று, நகைக் கடன் தொகை ரூ.4,918 கோடி மூலம் 11 இலட்சத்து 83 ஆயிரத்து 91 பயனாளிகள் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில்தான். பயிர்க்கடன் உரிய நேரத்தில் செலுத்துவோருக்கு வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக்கான கடன் உச்சவரம்பு உயர்த்தப்பட்டது. நம் திராவிட மாடல் ஆட்சியில்தான் என்பது ஒரு சிறப்பாகும்.

### அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டம்!

கூட்டுறவு அமைப்புகள் மூலம் 62,404 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 4,000 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில்தான். கூட்டுறவு அமைப்புகள்மூலம் 2,117 கோடி ரூபாய் கடனை, 1,01,897 சுய உதவிக் குழுக்களுக்கு 10,56,298 மகளிருக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் தான். கூட்டுறவு அமைப்புகள்மூலம் விவசாயிகளுக்குப் பல்லாயிரம் கோடி கடன் உரிய நேரத்தில் வழங்கப்பட்டது. கூட்டுறவு அமைப்புகள்மூலம் 380 மருந்தகங்கள், 365 நுகர்வோர் விற்பனை நிலையங்கள், 65 பண்ணைப் பசுமைக் கடைகள் திறக்கப்பட்டது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் தான். திருநங்கைகளுக்கு 1 இலட்ச ரூபாய், 5 சதவிகித வட்டியில் சிறுகுகள் திட்டம்மூலம் 2024 முதல் வழங்கப்பட்டது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில்தான்.

பட்டியலின மக்கள், பழங்குடியினர், தொழில் முனைவோருக்கு அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், 1-4-2021 முதல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படுவது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில்தான். கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 5 சதவிகித வட்டியில் கடன் வழங்கப்பட்டது, நம்முடைய கழக ஆட்சியில்தான். தமிழகத்திலுள்ள தானிய ஈட்டுக் கிடங்குகள் பழுது நீக்கம் செய்துதர வேண்டுகிறேன். தமிழகத்திலுள்ள கூட்டுறவு சங்கங்கள் அனைத்திற்கும் பாதுகாப்பு கருதி சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டுகிறேன். 2,494 நகரும் நியாயவிலைக் கடைகளை விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதை விரைவுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், ஏழை எளிய விவசாய மாணவர்களுக்குப் பயன்தரும் ஓர் உன்னதமான திட்டமாகும். அதற்கு 15-9-2022 அன்று முதல், சென்ற நிதியாண்டில் 37.17 கோடி ரூபாய் மதிப்பிலான 2,265 மெட்ரிக் டன் ரவை, 1,1939 மெட்ரிக் டன் கோதுமை ரவை, 2,231 மெட்ரிக் டன் சேமியா போன்ற வகை பொருட்கள் மொத்த பண்டக சாலைகள்மூலம் மாணவர்களுக்குக் தங்குதடையின்றி சுவையான சிற்றுண்டி கிடைப்பதற்கு கூட்டுறவு சங்கங்கள் உதவுகின்றன. மேலும், தமிழகத்திலுள்ள கூட்டுறவு அறிவியல் கலை கல்லூரி திண்டுக்கல் மாவட்டம் மாத்தூரில் செயல்வபடுவதுபோல், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஐவ்வாது மலையிலுள்ள 32 நியாயவிலைக் கடைகளிலும், சுமார் 16,171 குடும்ப அட்டைகளும் 71 அரசு துவக்கப் பள்ளிகளும், 28 அரசு நடுநிலைப் பள்ளிகளும், 33 அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட துவக்க நடுநிலைப் பள்ளிகள், 119 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்குத் தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை பாமாயில் போன்ற பொருட்கள் ஜமுனாமரத்தூரிலிருந்து 45 கி.மீ.ல் உள்ள போளூர் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு வாணிபக் கிடங்கிலிருந்து வழங்கப்படுகின்றன. இதனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐவ்வாது மலையில், ஜமுனாமரத்தூரில் ஒரு Civil Supplies Corporation godown அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதிய உணவுத் திட்டத்திற்கு பொருட்கள் வழங்குதல், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு பொருட்கள் வழங்குதல், வேட்டி சேலை வழங்குதல், பேரிடர் காலத்தில் பொருட்கள் வழங்குதல் போன்று மக்கள் பயன்பெறும் பல திட்டங்கள் நியாயவிலைக் கடைகள்மூலம செய ல்படுத்துவது, மக்களுக்கு பயனாக உள்ளன. பகுதி நேரக் கடைகளின் விதிமுறைகளை மாற்றியமைக்கப்பட வேண்டும். குறிப்பாக, புதுப்பாளை யம் ஒன்றியம், அரிதாரிமங்கலம் பகுதியில் 324 குடும்ப அட்டைகள் உள்ளன.

அந்தப் பகுதியில் கல்பயிர் என்ற ஒரு பகுதி 5 கி.மீ. தூரம் உள்ளது. இதில் 140 குடும்ப அட்டைகள் உள்ளன. இதுபோன்ற பகுதிகளுக்கு சிறப்பு அனுமதி தருவதன்மூலம் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் நியா யவிலைக் கடைகளில் வழங்கப்பட்ட அரிசி கோழிகளுக்கும், மாடுகளுக்கும் வழங்கப்பட்ட அளவிலான அரிசியாக இருந்தன. அதை மாற்றி, திராவிட மாடல் ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசினால் பொதுமக்களுக்கு மிகவும் தரமான அரிசி வழங்கப்படுகிறது. மேலும், சந்தவாசல் முதல் மேல் செண்பகத்தோப்பு வரையுள்ள வனத் துறைக்குச் சொந்தமான 7 கி.மீ. சாலை பல ஆண்டுகளாக அமைக்கப் படாமல் உள்ளது. (குறுக்கீடுகள்)

இந்த ஆண்டு வனத் துறை யின்மூலம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)ஆதமங்கலம்புதூர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம், காவலர்களுக்கு புதிய காவலர் குடியிருப்பு கட்டித் தர வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்)

### புதிய தடுப்பணைகள்!

ஐவ்வாதுமலைப் பகுதியில், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை புதிதாக கட்டித் தர வேண்டுகிறேன். கேட்டவரம் பாளையம் வேளாண்மை விற்பனைக் கூடத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். மேலும் எனது தொகுதியின் முக்கிய கோரிக்கைகளை தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். அவற்றை நான் அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் சேர்ப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 100 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை 4 ஆண்டுகளில் (மேசையைத் தட்டும் ஒலி)

அமைச்சர் அவர்களின் பரிந்துரையின்பேரில், புதிய காவல் நிலையம், புதிய விளையாட்டு அரங்கம், ஏ.கே. படவேடு ஆரம்ப சுகாதார நிலையம், புதுப்பா ளையம் ஒன்றிய அலுவலகம், சுற்றுலா மாளிகை, பள்ளிக் கட்டடங்கள், புதுப்பாளை யம் பேரூராட்சியில் இந்த ஆண்டு பேருந்து நிலையம், வேளாண்மை விற்பனைக் கூடம்,

பட்டயக் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள், புதிய குறுவட்டம், கூட்டுறவுச் சங்கத்தின் தானியக் கிடங்குகள், ஐவ்வாது மலையை சுற்றுலாத் தளமாக மாற்றியது, வனத் துறை சாலைகள், ஐவ்வாது மலைக்கு விடியல் பயணப் பேருந்து, பல மகுதிகளுக்கு நிதியுதவி, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின்மூலம் இரண்டு புதிய திருமண மண்டபங்கள், அன்னதானக் கூடங்கள், பல திருக்கோ யிலுக்கு முடமுழுக்கு செய்தது, இரண்டு திருத்தேர் இதற்கெல்லாம் சிகரம் அமைத்ததுபோன்று கடந்த காலங்களில் செய்ய தவறிய முக்கியப் பணிகளான தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், என்னுடைய தந்தை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால், 19962001 ஆண்டு காலத்தில் செய்யாற்றின் குறுக்கே கலசப்பாக்கத்தில் ஒரு மேம்பாலமும் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் வழங்கப்பட்டது.

தற்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சி தளபதி அவர்களின் ஆட்சியில் செய்யாற்றின் குறுக்கே பழங்கோயில் பில்லூர், கூவம்பட்டு கீழ்ப்பத்துறை, கோவில்மாதிமங்கலம், கீழ்தாமரைப் பாக்கம், காலூர், குருவிமலை என்னும் வரலாற்று சிறப்புமிக்க செய்யாற்றில், (மணியடிக்கப்பெற்றது) வரலாற்று சிறப்பு மிக்க பாலங்கள் வழங்கினார்.

புதிய தடுப்பணைகள் இவையனைத்தும் இந்த நான்கு ஆண்டுகளில் கலசப்பாக்கம் தொகுதியில் செய்து கொடுத்த முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், இவை அனைத்தும் கிடைக்க உறுதுணையாக இருந்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் கலசப்பாக்கம் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் அவர்கள் வழங்கிய குப்பணத்தம் அணை, முத்தமிழறி ஞர் தலைவர் அவர்கள் வழங்கிய மிருகண்ட நதி அணையை நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அதை சரிசெய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்து சமயம் மற்றும் அறிநிலையத் துறை மூலமாக அறிவிக்கப்பட்ட கோவில்மாதிமங்கலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நீதிமன்ற வழிகாட்டுதல்களுடன் இந்த ஆண்டு துவக்க வேண்டும் என்று மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறிநிலையத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் வட்டத்தை, ஆரணி வருவாய்க் கோட்டத்திலிருந்து பிரித்து திருவண்ணா மலை வருவாய் கோட்டத்தில் மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக் கொண்டு, மண்ணில் மலைகள் சாய்வதில்லை. கடலில் அலைகள் ஓய்வதில்லை. வானம் தரையில் வீழ்வதில்லை. எங்கள் தளபதியை வீழ்த்த யாரும் பிறக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 2026ல் மீண்டும் தளபதி கையில்தான் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு 2024ன் 40க்கு 40 சாட்சி என்று கூறி, திரைப்பட நடிகர் வடிவேல் அவர்கள் 'போடா போடா புண்ணாக்கு, போடாத தப்பு கணக்கு' என்று ஒரு பாடல் பாடியிருப்பார். அதுபோல தளபதி அவர்களை யாரும் தப்பு கணக்கு போட வேண்டாம் என்றுகூறி, (மேசையைத் தட்டும் ஒலி) 2026ல் அவர் மீண்டும் தமிழக முதல்வராக இருப்பது உறுதி, உறுதி என்று கூறி, இவ்வளவு நேரம் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய தளபதி அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி பல வளர்ச்சிகள் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த உழைப்பால் உயர்ந்தவர், உழைப்பவர்களை மதிப்பவர் எங்கள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். .

### தொகுதியின் முக்கிய கோரிக்கைகள்

1. கடலாடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய மருத்துவர் குடியிருப்பு மற்றும் செவிலியர் குடியிருப்பு அமைக்க வேண்டும். 2. மேல்வில்வராயநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய செவிலியர் குடியிருப்பு கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல் வேண்டும். 3. காரப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய மருத்துவர் குடியிருப்பு மற்றும் செவிலியர் குடியிருப்பு அமைக்க வேண்டும். 4. பட்டரைக்காடு பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். 5. படவேடு சுகாதார நிலையத்திற்கு புதிய குடியிருப்பு மற்றம் செவிலியர் குடியிருப்பு அமைத்தல். 6. வாழியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செவிலியர் குடியிருப்பு அமைக்க வேண்டும். 7. ஐவ்வாதுமலையில் உள்ள அரசு மருத்துவமனையை தாலுக்கா மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும். 8. கலசபாக்கம் அரசு மருத்துவமனையை தாலுக்கா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டும். 9. ஐவ்வாதுமலை ஒன்றியம் கோவிலூர் ஊராட்சியில் உள்ள பழமை வாய்ந்த சிவன் கோவில் மற்றும் குளத்தை சீரமைக்க வேண்டும். 10. எலத்தூர் மோட்டூர் நட்சத்திர கோவில் குடமுழுக்கு செய்து தர வேண்டும். 11. பருவதமலைக்கு செல்லும் திருக்கோவிலுக்கு சொந்தமான பாதையை அகலபடுத்தி குடிநீர் வசதி சோலார் மின் விளக்குகள் செய்து தர வேண்டும். 12. பருவதமலைக்கு ரோப்கார் அமைத்தல் வேண்டும். 13. தென்மாதிமங்கலம் ஊராட்சியில் அறநிலையத்துறை மூலம் புதிய திருமண மண்டபம் அமைத்தல் வேண்டும். 14. எலத்தூர் மோட்டூர் நட்சத்திரக்கோயில் புதிய திருமண மண்டபம் அமைத்தல் வேண்டும். 15. எலத்தூர்மோட்டூர் நட்சத்திரகோவிலுக்கு முடி திருத்தும் கட்டிடம் கட்டப்பட வேண்டும். 16. பருவதமலை கிரிவலப்பாதையை மேம்படுத்தப்பட வேண்டும். 17. புதுப்பாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் உள்ள விநாயகர் மற்றும் ஸ்ரீ மாரியம்மன் கோவிலுக்கு ஒரு கால பூஜை திட்டத்தில் சேர்த்து பூஜை நடைபெற ஆவணம் செய்ய வேண்டும். 18. கலசபாக்கத்தில் பழைய யுநுழு அலுவலக கட்டிடம் பழுதடைந்துள்ளதால் புதிய அலுவலகம் அமைத்துத்தர வேண்டுகிறேன். 19. கீழ்க்கண்ட அரசு உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட வேண்டும். 1.கிடாம்பாளையம் 2.தென்மாதிமங்கலம் 3. கீழ்பாலூர் 4.கீழ்குப்பம் 5.பாடகம் 6. காம்பட்டு 20. அம்மாபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் பாடப்பிரிவு (வரலாறு மற்றும் பொருளியல்); பாடப்பிரிவுகள் உருவாக்குதல். 21. கலசபாக்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய 15 வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம் உருவாக்குதல். 22. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

23. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேல்நாச்சிப்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி தர வேண்டும். (குறிப்பு: மக்களின் பங்களிப்புத் தொகையை ரூ.200000 லட்சம் அரசு கணக்கு தலைப்பு 020201102யுடீ 0207 ல் கடந்த 03.06.2014 ல் கட்டப்பட்டது. 24. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சி.கெங்கம்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி தர வேண்டும். (குறிப்பு : மக்களின் பங்களிப்பு தொகையை ரூ.200000 லட்சம் அரசு கணக்கு தலைப்பில் கட்டப்பட்டுள்ளது.)

25. நாகப்பாடி அரசு பட்டைய கல்லூரிக்கு அடிப்படை வசதி செய்து தரப்பட வேண்டும். 26. மிருகண்ட நதி அணையை சீரமைக்க வேண்டும். 27. செய்யாற்றின் குறுக்கே ஓரவந்த வாடி காஞ்சி தாமரைப்பாக்கம் பகுதிகளில் தடுப்பணை கட்டுதல். 28. மிருகண்ட நதி பாசன கால்வாயில்; கடலாடி அருகில் தடுப்பணை கட்டுதல் வேண்டும். 29. செய்யாற்றை தென்பெண்ணை ஆற்றுடன் இணைக்கப்பட வேண்டும்.

30. கலசபாக்கத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கு புதிய உதவி கோட்டப்பொறியாளர் அலுவலகம் உருவாக்கப்பட வேண்டும். 31. ஐவ்வாது மலைக்கு புதிய பிரிவு அலுவலகம் நெடுஞ்சாலைத்துறைக்கு (ளுநஉ வழைா முகஉஉ) அமைத்தல் வேண்டும். 32. ஐவ்வாதுமலையில் பல கிராமங்களுக்கு சாலை வசதியில்லை. காரணம் வனத்துறையில் அனுமதி பெறுவதில் இருக்கும் பிரச்சனைகள். அதை எளிமை படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

33. எலத்தூர் மோட்டூர் போக்குவரத்து பணிமனையை செயல்பாட்டிற்கு கொண்டு வருதல். 34. காலூர் ஊராட்சியில் துணைமின் நிலையம் 230மஎ அமைக்க வேண்டும். 35. கலசபாக்கத்தில் மின்வாரிய உதவிப் செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்கு நிரந்திர கட்டிடம் கட்டித் தர வேண்டும். 36. புதுப்பாளையம் பேரூராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் கொண்டு வருதல் வேண்டும்.

37. புதுப்பாளையம் பேரூராட்சியில் உள்ள அம்மாகுளம் சீரமைத்து உபரிநீர் கால்வாய் இருபுறமும் தடுப்புச்சுவர் கட்டப்பட வேண்டும். 38. ஐவ்வாதுமலையில் புதிய பத்திரப்பதிவு அலுவலகம் அமைத்தல் வேண்டும் 39. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி புதுப்பாளையம் ஒன்றியம் காஞ்சியில் புதிய பத்திரப்பதிவு அலுவலகம் அமைத்து தரவேண்டும். 40. ஐவ்வாதுமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை புதியதாக கட்டித்தர வேண்டும். 41. போளூர் ஒன்றியத்திற்குட்பட்ட செண்பகத் தோப்பு அணையிலிருந்து மேல்செண்பத் தோப்பு செல்லும் சாலையை மேம்படுத்த வேண்டும். 42. போளூர் ஒன்றியம் மேல்செண்பகத் தோப்பு மற்றும் கீழ் செண்பகத் தோப்பு இடையில் நாக நதியின் குறுக்கே பாலம் அமைத்து தரவேண்டும். 43. ஐவ்வாதுமலையில் துணை கருவூலம் அமைக்கப்பட வேண்டும்.

44. செங்கம் வட்டத்தை பிரித்து புதுப்பாளையம் அல்லது காஞ்சியை தலைமையிடமாக கொண்டு ஒரு வட்டத்தை பிரித்து தர வேண்டும். 45. ஐவ்வாதுமலை படகு சவாரியை சுற்றுலாத் துறையின் மூலம் அரசு மேம்படுத்த வேண்டும். 46. கலசபாக்கத்திற்கு புதியதாக நீதி மன்றம் கட்டடம் அமைத்துத்தர வேண்டும். 47. கலசபாக்கம் மற்றும் காஞ்சி பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் உருவாக்கப்பட வேண்டும். 48. புதுப்பாளையம் ஒன்றியம் பெரியகுளம் பகுதியில் நறுமண தொழிற்சாலையை ஏற்படுத்தல் வேண்டும். 49. புதுப்பாளையம் ஒன்றிய பகுதிகளில் குளிர்பதன கிடங்கு அமைத்துத் தரவேண்டும். 50. ஐவ்வாதுமலையில் வேளாண்மைத் துறையில் யுனுநு ஆபீஸ் அமைக்க வேண்டும்.

51. படவேடு பகுதியில் வாழை அதிகம் விளைகிறது. விவசாயிகளின் நலன் கருதி அந்த பகுதியில் குளிர் சாதன கிடங்கு அமைக்க வேண்டும். 52. மாற்று திறனாளிகளுக்கு 100 சதவீதம் பாதித்தவர்களுக்கு மட்டும் மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர் என்பதை மாற்றி 75 சதவீதம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். 53. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளில் சமுதாயக்கூடம் கட்டித் தரப்பட வேண்டும். 54. போளூர் ஒன்றியம் சந்தவாசல் முதல் செண்பகத் தோப்பு அணை வரை வனத்துறைக்கு சொந்தமான 7கி.மீ சாலையை மேம்படுத்த வேண்டும். 55. ஐவ்வாதுமலை ஒன்றியத்தில் வனத்துறைக்கு சொந்தமான சுமார் 93 கிலோமீட்டர் ஓரடுக்கு ஜல்லி சாலையையும் 57.95 கிலோமீட்டர் மண் சாலையையும் மேம்படுத்தப்பட வேண்டும். 56. மிருகண்ட நதி அணையில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வண்ணம் ப10ங்காவை அமைத்து தர வேண்டும்.

57. செண்பகத்தோப்பு அணையில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வண்ணம் ப10ங்காவை அமைத்து தர வேண்டும். 57. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் செய்யாற்றின் குறுக்கே இறையூர் பகுதியில் தடுப்பணை கட்டித்தர வேண்டுதல். 58. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் வீரானந்தல் பகுதியில் கோரையாற்றின் குறுக்கே அணைகட்டு கட்டித்தர வேண்டுதல் 59. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஐவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம்; கோவிலூர் ஊராட்சி ஜமுனாமரத்தூரில் அனைத்து வசதிகளுடனும் மற்றும் 500 இருக்கை போடக்கூடிய அளவுக்கு மலைவாழ் மக்களுக்காக சமுதாய கூடம் அமைத்து தர வேண்டுதல்.

60. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஐவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம்; கோவிலூர் ஊராட்சி கோட்டை சாமி கோயில் அருகில் அனைத்து வசதிகளுடனும் மற்றும் 500 இருக்கை போடக்கூடிய அளவுக்கு மலைவாழ் மக்களுக்காக சமுதாய கூடம் அமைத்து தர வேண்டுதல் 61. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியம்; கடலாடி மற்றும் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் தாமரைபாக்கம் இடையே செய்யாற்றின் குறுக்கே தரைபாலம் அமைத்து தரவேண்டும் 62. கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி கலசபாக்கம் ஒன்றியம் மேல்சோழங்குப்பம் மிருகண்ட நதி அணையில் பூங்கா சாலை வசதி மின்சார வசதி சுற்றுலா மாளிகை போன்ற அனைத்து வசதிகளுடன் சீரமைத்துதர வேண்டும். 63. கலசபாக்கம் சட்மன்றத்தொகுதிக்குட்பட்ட புதுப்பாளையம் ஒன்றியத்தில்; அரசு பரிசீலனையில் உள்ள இறையூர் மற்றும் வடமாத்தூர் இணைப்பு மற்றும் பாசன கால்வாய் திட்டத்தை செயல்படுத்தி தர வேண்டும் 64. கல